**<u>தொழில்நுட்பக் கல்வித் துறை</u>**

| **அனுப்புநர்** | **பெறுநர்** |
|---|---|
| திருமதி. ஜெ. இன்னசென்ட் திவ்யா, இ.ஆ.ப.,<br>தேர்வு வாரியத் தலைவர்,<br>தொழில்நுட்பக் கல்வி இயக்ககம்,<br>கிண்டி, சென்னை - 600 025 | முதல்வர்கள்.<br>அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகள் |

**<u>கடித எண். eFile-DOTE/2482/2025-M1, நாள் 09-01-2026</u>**

ஐயா / அம்மையீர்,

பொருள்: தொழில்நுட்பக் கல்வி இயக்ககம் – தேர்வுப் பிரிவு - அக்டோபர் 2025 பட்டயத் தேர்வுகள் – அச்சுப்பகர்ப்பு நகல் அளித்தல் மற்றும் மறுமதிப்பீடு செய்தல் – தொடர்பாக.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.244 உயர் கல்வித் (பி1) துறை, நாள் 31.07.2001.
2. அரசு கடித எண்.8860/பி/2002-1 உயர் கல்வித் (பி1) துறை நாள் 09.07.2002.

*****

அக்டோபர் 2025 பட்டயத் தேர்வுகளுக்கான முடிவுகள் 06.01.2026 அன்று வெளியிடப்பட்ட நிலையில், கீழ்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு மறுமதிப்பீடு செய்து தேர்வு முடிவுகளை வெளியிட அனைத்து அரசு / அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி பாலிடெக்னிக் கல்லூரிகளின் முதல்வர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**<u>அச்சுப்பகர்ப்பு நகல் பெறுதல் மற்றும் மறுமதிப்பீட்டிற்காக விண்ணப்பிப்பதற்கான கால அட்டவணை</u>**

| | | |
|---|---|---|
| பட்டயத் தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நாள் | : | 06.01.2026 செவ்வாய் |
| மறுமதிப்பீட்டிற்காக அச்சுப்பகர்ப்பு நகல் (Scan Copy) பெறுவதற்காக விண்ணப்பிக்க ஆரம்ப நாள் (விண்ணப்பக் கட்டணம் ரூ.100/-) | : | 08.01.2026 வியாழன் |
| அச்சுப்பகர்ப்பு நகல் (Scan Copy) பெறுவதற்காக விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 12.01.2026 திங்கள் இரவு 11.59 வரை |
| அச்சுப்பகர்ப்பு நகல் (Scanned Copy) பதிவேற்றம் செய்யப்படும் நாள் | : | 20.01.2026 செவ்வாய் |
| மறுமதிப்பீட்டிற்காக விண்ணப்பிக்க ஆரம்ப நாள் (விண்ணப்பக் கட்டணம் ரூ.400/-) | : | 20.01.2026 செவ்வாய் |
| மறுமதிப்பீட்டிற்காக விண்ணப்பிக்க கடைசி நாள் | : | 24.01.2026 சனி இரவு 11.59 வரை |
| மறுமதிப்பீட்டு முடிவுகள் வெளியிடப்படும் நாள் | : | 03.02.2026 செவ்வாய் |

**அக்டோபர் 2025 பட்டயத் தேர்வுகளின் விடைத்தாள்களை அச்சுப்பகர்ப்பு நகல் பெறுதல் மற்றும் மறுமதிப்பீட்டிற்காக விண்ணப்பிப்பதற்கான வழிகாட்டு நெறிமுறைகள்:**

- அச்சுப்பகர்ப்பு நகல் பெறுதல் மற்றும் மறுமதிப்பீட்டிற்காக https://dipexamstndte.in என்ற இணையதள பக்கத்தில் இணைய வழியில் மட்டுமே மாணாக்கர்கள் நேரடியாக விண்ணப்பித்து, அதற்கான கட்டணத்தினை இணைய வழியில் செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
- அச்சுப்பகர்ப்பு நகலினை மாணாக்கர்கள் தாங்கள் பயின்ற கல்லூரியினை அணுகி பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**கல்லூரி முதல்வர்களுக்கான வழிகாட்டு நெறிமுறைகள்:**

- அச்சுப்பகர்ப்பு நகலினைப் பதிவிறக்கம் செய்வதற்கு ஏதுவாக, பயனாளர் குறியீட்டு எண் (Username) மற்றும் கடவுச்சொல் (Password) அடங்கிய விவரங்களானது FTP Online Portal இல் வெளியிடப்படும். சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்கள் அச்சுப்பகர்ப்பு நகல் கோரி விண்ணப்பித்த மாணாக்கர்களின் விடைத்தாள்களின் நகலினைப் பதிவிறக்கம் செய்து மாணாக்கர்களுக்கு வழங்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- அக்டோபர் 2025 பட்டயத் தேர்வுகளின் விடைத்தாள்களை மறுமதிப்பீடு செய்யும் பணியானது 28.01.2026 முதற்கொண்டு நடைபெற உள்ளதால், மறுமதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் அனைத்து தேர்வாளர்கள் அடங்கிய பட்டியலானது FTP Portal வாயிலாக வெளியிடப்படும். இருப்பினும், ஒவ்வொரு நாளுக்கான மறுமதிப்பீடு செய்யவேண்டிய விடைத்தாள்களின் விவரமானது அப்பணியில் ஈடுபடும் தேர்வாளர்களுக்கு மட்டும் அவரவர்களின் கைபேசி மற்றும் மின்னஞ்சல் வாயிலாக குறுஞ்செய்தி அவ்வப்போது அனுப்பப்படும். அக்குறுஞ்செய்தியின் அடிப்படையில், மறுமதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் மேற்படி தேர்வாளர்களால் அன்றைய தினமே விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.
- எனவே, இக்குறுகிய காலத்தினைக் கருத்திற்கொண்டும், மாணாக்கர்களின் நலன் கருதியும், மறுமதிப்பீட்டு பணிக்கு நியமிக்கப்படும் தேர்வாளர்களை

மேற்படி பணிக்கு முன்னுரிமை அளித்து உரிய காலத்திற்குள் பணியினை முடிக்க அறிவுறுத்துமாறு சம்பந்தப்பட்ட கல்லூரிகளின் முதல்வர்கள் அறிவுறுத்தப் படுகிறார்கள்.

**J.INNOCENT DIVYA**
தேர்வு வாரியத் தலைவர்

**நகல்**
கூடுதல் இயக்குநர் (தேர்வுகள்),
உதவி இயக்குநர் (தேர்வுகள்),
வட்டார அலுவலர் IV,
தொழில் நுட்ப உதவியாளர் (மதிப்பீடு – I).
தொழில் நுட்ப உதவியாளர் (இயந்திரவியல்),
"N", "P" மற்றும் "PP" பிரிவு கண்காணிப்பாளர்கள்,
'எம்1' இருக்கை
இருப்புக் கோப்பு